# பாரதியார்

## குழந்தைப் பாடல்கள்

பகுதி–2

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com



# மகாகவி

# சி. சுப்பிரமணிய பாரதியார்

| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 1. | காணி நிலம் வேண்டும் | 1 |
| 2. | சின்னஞ் சிறு கிளியே | 2 |
| 3. | ஆசை முகமறந்து போச்சே | 4 |
| 4. | வருவாய், வருவாய் வருவாய் - கண்ணா | 6 |
| 5. | எத்தனை கோடி இன்பம் | 7 |
| 6. | தொழில் | 8 |
| 7. | நாட்டுக் கல்வி | 10 |
| 8. | விடுதலை | 11 |
| 9. | பெண் விடுதலை | 12 |
| 10. | ஆனை விற்கும் வர்த்தகராம் | 13 |
| 11. | விடிவெள்ளி நம்விளக்கு | 14 |
| 12. | நல்லதோர் வீணை | 15 |
| 13. | அறிவே தெய்வம் | 16 |
| 14. | செந்தமிழ் நாடு | 19 |
| 15. | நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே | 22 |

# 1. காணி நிலம் வேண்டும்

காணி நிலம்வேண்டும், - பராசக்தி
காணி நிலம்வேண்டும்; - அங்குத்
தூணில் அழகியதாய் - நன்மாடங்கள்
துய்ய நிறத்தினவாய் - அந்தக்
காணி நிலத்தினிடையே - ஓர் மாளிகை
கட்டித் தரவேண்டும்; - அங்குக்
கேணி யருகினிலே - தென்னைமரம்
கீற்று மிளநீரும்,

பத்துப் பன்னிரண்டு - தென்னைமரம்
பக்கத்திலே வேணும்; - நல்ல
முத்துச் சுடர்போலே - நிலாவொளி
முன்பு வரவேணும்; அங்குக்
கத்துங் குயிலோசை - சற்றே வந்து
காதிற் படவேணும்; - என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே - நன்றாயிளந்
தென்றல் வரவேணும்.




# 2. சின்னஞ் சிறு கிளியே



சின்னஞ் சிறுகிளியே, - கண்ணம்மா!
செல்வக் களஞ்சியமே!
என்னைக் கலிதீர்த்தே - உலகில்
ஏற்றம் புரியவந்தாய்!

பிள்ளைக் கனியமுதே, - கண்ணம்மா!
பேசும்பொற் சித்திரமே!
அள்ளி யணைத்திடவே - என் முன்னே
ஆடி வருந் தேனே!



ஓடி வருகையிலே, - கண்ணம்மா!
உள்ளங் குளிரு தடீ;
ஆடித்திரிதல் கண்டால் - உன்னைப்போய்
ஆவி தழுவு தடீ.

உச்சி தனை முகந்தால் -- கருவம்
ஓங்கி வளரு தடீ;
மெச்சி யுனையூரார் -- புகழ்ந்தால்
மேனி சிலிர்க்கு தடீ.

உன்கண்ணில் நீர்வழிந்தால் -- என்னெஞ்சில்
உதிரங் கொட்டு தடீ;
என்கண்ணில் பாவையன்றோ? -- கண்ணம்மா!
என்னுயிர் நின்ன தன்றோ?

சொல்லு மழலையிலே, -- கண்ணம்மா!
துன்பங்கள் தீர்த்திடு வாய்;
முல்லைச் சிரிப்பாலே -- எனது
மூர்க்கந் தவிர்த்திடுவாய்.

இன்பக் கதைக ளெல்லாம் -- உன்னைப்போல்
ஏடுகள் சொல்வ துண்டோ?
அன்பு தருவதிலே -- உனைநேர்
ஆகுமோர் தெய்வ முண்டோ?









# 3. ஆசை முகமறந்து போச்சே

ஆசை முகமறந்து போச்சே -- இதை
ஆரிடம் சொல்வேனடி தோழி?
நேச மறக்கவில்லை நெஞ்சம் -- எனில்
நினைவு முகமறக்க லாமோ?

கண்ணில் தெரியுதொரு தோற்றம் -- அதில்
கண்ண னழகு முழுதில்லை;
நண்ணு முகவடிவு காணில் -- அந்த
நல்ல மலர்ச்சிரிப்பைக் காணோம்.

கண்கள் புரிந்துவிட்ட பாவம் -- உயிர்க்
கண்ண னுருமறக்க லாச்சு;
பெண்க ளினிடத்திலிது போலே -- ஒரு
பேதையை முன்புகண்ட துண்டோ?



தேனை மறந்திருக்கும் வண்டும் -- ஒளிச்
சிறப்பை மறந்துவிட்ட பூவும்
வானை மறந்திருக்கும் பயிரும் -- இந்த
வைய முழுதுமில்லை தோழி.

கண்ணன் முகமறந்து போனால் -- இந்தக்
கண்க ளிருந்தும் பயனுண்டோ?
வண்ணப் படமுமில்லை கண்டாய் -- இனி
வாழும் வழியென்னடி தோழி?



# 4. வருவாய், வருவாய் வருவாய் - கண்ணா

பல்லவி


வருவாய், வருவாய், வருவாய் -- கண்ணா
வருவாய், வருவாய், வருவாய்.

சரணங்கள்

உருவாய் அறிவில் ஒளிர்வாய் -- கண்ணா
உயிரின் னமுதாய்ப் பொழிவாய் -- கண்ணா
கருவாய் என்னுள் வளர்வாய் -- கண்ணா
கமலத் திருவோ டிணைவாய் – கண்ணா (வருவாய்)

இணைவாய் எனதா வியிலே -- கண்ணா
இதயத் தினிலே யமர்வாய் -- கண்ணா
கணைவா யசுரர் தலைகள் -- சிதறக்
கடையூ ழியிலே படையோ டெழுவாய்! (வருவாய்)

எழுவாய் கடல்மீ தினிலே -- எழுமோர்
இரவிக் கிணையா உளமீ தினிலே
தொழுவேன் சிவனாம் நினையே -- கண்ணா,
துணையே, அமரர் தொழும்வா னவனே! (வருவாய்)





# 5. எத்தனை கோடி இன்பம்

பல்லவி

எத்தனை கோடி இன்பம் வைத்தாய் -- எங்கள்
இறைவா! இறைவா! இறைவா!

(ஓ-எத்தனை)

சரணங்கள்

சித்தினை அசித்துடன் இணைத்தாய் -- அங்குசெ
சேருமைப் தத்து வியனுல கமைத்தாய்
அத்தனை யுலகமும் வர்ணக் களஞ்சிய
மாகப் பலபலநல் லழகுகள் சமைத்தாய்.

(ஓ-எத்தனை)

முத்தியென் றெருநிலை சமைத்தாய் -- அங்கு
முழுதினை யுமுண ருமுணர்வமைத்தாய்
பக்தியெர்ன்றெருநிலை வகுத்தாஉய் எங்கள்
பரமா, பரமா, பரமா.

(ஓ-எத்தனை)

# 6. தொழில்



இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே!
யந்திரங்கள்வகுத்திடு வீரே!
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே!
கடலில்மூழ்கிநன் முத்தெடுப்பீரே!



அரும்பும்வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரந் தொழில் செய்திடு வீரே!
பெரும்பு கழ்நுமக் கேயிசைக் கின்றேன்.
பிரம தேவன் கலையிங்கு நீரே!



மண்ணெடுத்துக் குடங்கள் செய்வீரே!
மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே!
உண்ணக் காய்கனி தந்திடு வீரே!
உழுது நன்செய்ப் பயிரிடு வீரே!


எண்ணெய், பால்நெய் கொணர்ந்திடு வீரே!
இழையை நூற்றுநல் லாடைசெய் வீரே!
விண்ணி னின்றெமை வானவர் காப்பார்;
மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே!






பாட்டும் செய்யுளும் கோத்திடு வீரே!
பரத நாட்டியக் கூத்திடு வீரே!
காட்டும் வையப் பொருள்களின் உண்மை
கண்டு சாத்திரம் சேர்த்திடு வீரே!

நாட்டி லேயறம் கூட்டி வைப்பீரே!
நாடும் இன்பங்கள் ஊட்டி வைப்பீரே;
தேட்ட மின்றி விழியெதிர் காணும்
தெய்வ மாக விளங்குவிர் நீரே!



# 7. நாட்டுக் கல்வி

இன்னு மிங்கிருள் கூடி யிருப்பினும்
ஏங்கு கின்ற நரகத் துயிர்கள்போல்
இன்னு மிங்கு வனத்திடை காற்றுத்தான்
ஓங்கும் ஓதை இருந்திடும் ஆயினும்
முன்னைக் காலத்தின் நின்றெழும் பேரொலி
முறை முறைபல ஊழியின் ஊடுற்றே
பின்னை இங்குவந் தெய்திய பேரொலி
போல மந்திர வேதத்தின் பேரொலி.



“இருளை நீக்கி ஒளியினைக் காட்டுவாய்,
இறப்பை நீக்கி, அமிர்தத்தை ஊட்டுவாய்”
அருளும் இந்த மறையொலி வந்திங்கே
ஆழ்ந்த தூக்கத்தில் வீழ்ந்திருப் பீர்தமைத்
தெருள் உறுத்தவும் நீர்எழு கில்லிரோ?
தீய நாச உறக்கத்தில் வீழ்ந்தநீர்
மருளை நீக்கி அறிதிர் அறிதிரோ
வான் ஒளிக்கு மகாஅரி யாம்என்றே.





# 8. விடுதலை

இந்தப் புவிதனில் வாழும் மரங்களும்
இன்ப நறுமலர்ப் பூஞ்செடிக் கூட்டமும்
அந்த மரங்களைச் சூழ்ந்த கொடிகளும்
ஔடத மூலிகை பூண்டுபுல் யாவையும்
எந்தத் தொழில் செய்து வாழ்வனவோ?

வேறு

மானுடர் உழாவிடினும் வித்து நடாவிடினும்
வரம்பு கட்டாவிடினும் அன்றிநீர்பாய்ச் சாவிடினும்
வானுலகு நீர்தருமேல் மண்மீது மரங்கள்
வகைவகையா நெற்கள் புற்கள் மலிந்திருக்குமன்றே?
யானெதற்கும் அஞ்சுகிலேன், மானுடரே, நீவிர்
என்மதத்தைக் கைக்கொண்மின்; பாடுபடல் வேண்டா;
ஊனுடலை வருத்தாதீர்; உணவியற்கை கொடுக்கும்;
உங்களுக்குத் தொழிலிங்கே அன்புசெய்தல் கண்டீர்.



# 9. பெண் விடுதலை




பெண்ணுக்கு விடுதலையென் றிங்கோர் நீதி
பிறப்பித்தேன்; அதற்குரிய பெற்றி கேளீர்!
மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வ மென்றால்,
மனையாளும் தெய்வமன்றோ? மதிகெட் டீரே!
விண்ணுக்குப் பறப்பதுபோல் கதைகள் சொல்வீர்,
விடுதலையென் பீர் கருணை வெள்ள மென்பீர்,
பெண்ணுக்கு விடுதலைநீரில்லை யென்றால்
பின்னிந்த உலகினிலே வாழ்க்கை யில்லை.



# 10. ஆனை விற்கும் வர்த்தகராம்



ஆனை விற்கும் வர்த்தகராம்-உன் மாமன்
சேனைக் கெல்லாம் அதிகாரியாம்
சின்னண்ணன் வந்தானோ கண்ணே-உனக்கு
சின்னச் சட்டை கொடுத்தானோ உனக்கு
பட்டு ஜவுளிகளும் கண்ணே உனக்குப்
பல வர்ணச் சட்டைகளும்
பட்டுப் புடவைகளும் கண்ணே-உனக்கு
கட்டிக் கிடக் கொடுத்தானோ!
பொன்னால் எழுத்தாணியும்-கண்ணே உனக்கு
மின்னோலைப் புஸ்தகமும்
கன்னாரே ! பின்னா ரேன்னு-கண்ணே
கவிகளையும் கொடுத்தானோ !






# 11. விடிவெள்ளி நம்விளக்கு

விடிவெள்ளி நம்விளக்கு - ஜலசா
விரிகடலே பள்ளிக்கூடம் - ஜலசா

அடிக்கும் அலையே நம்தோழன் - ஜலசா
அருமைமேகம் நமதுகுடை - ஜலசா

பாயும் புயல் நம்ஊஞ்சல் - ஜலசா
பனிமூட்டம் உடல்போர்வை - ஜலசா

காயும் ரவிச்சுடர்கூரை - ஜலசா
கட்டுமரம் வாழும் வீடு - ஜலசா

மின்னல்வலை அரிச்சுவடி - ஜலசா
பிடிக்கும் மீன்கள் நம்பொருட்கள் - ஜலசா

மின்னல் இடிகாணும் கூத்து - ஜலசா
வெண்மணலே பஞ்சுமெத்தை - ஜலசா

முழுநிலாதான் கண்ணாடி - ஜலசா
மூச்சடக்கி நீந்தல் யோகம் - ஜலசா

தொழும் தலைவன் பெருவானம் - ஜலசா
தொண்டு தொழிலாளர் நாங்கள் - ஜலசா

ஒத்துமை கொண்டாடனும் - ஜலசா
உரிமையை உயர்த்திடனும் - ஜலசா



# 12. நல்லதோர் வீணை



நல்லதோர் வீணைசெய்தே -- அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?
சொல்லடி, சிவசக்தி! -- எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்து விட்டாய்,
வல்லமை தாராயோ, -- இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே?
சொல்லடி, சிவசக்தி! -- நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ?

விசையுறு பந்தினைப்போல் -- உள்ளம்
வேண்டிய படிசெலும் உடல்கேட்டேன்,
நசையறு மனங்கேட்டேன், -- நித்தம்
நவமெனச் சுடர்தரும் உயிர்கேட்டேன்,
தசையினைத் தீசுடினும் -- சிவ
சக்தியைப் பாடும்நல் அகங்கேட்டேன்,
அசைவறு மதிகேட்டேன்; -- இவை
அருள்வதில் உனக்கெதுந் தடையுளதோ?

# 13. அறிவே தெய்வம்

ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகள் -- பல்
லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்
டாமெனல் கேளீரோ?



மாடனைக் காடனை வேடனைப் போற்றி
மயங்கும் மதியிலிகாள் -- எத
னூடும் நின் றோங்கு மறிவொன்றே தெய்வமென்
றோதி யறியீரோ?

சுத்த அறிவே சிவமென்று கூறுஞ்
சுருதிகள் கேளீரோ? -- பல
பித்த மதங்களி லேதடு மாறிப்
பெருமை யழிவீரோ?

வேடம்பல் கோடியொர் உண்மைக் குளவென்று
வேதம் புகன்றிடுமே -- ஆங்கோர்
வேடத்தை நீருண்மை யென்றுகொள் வீரென்றவ்
வேத மறியாதே.




நாமம்பல் கோடியொர் உண்மைக் குளவென்று
  நான்மறை கூறிடுமே -- ஆங்கோர்
நாமத்தை நீருண்மை யென்றுகொள் வீரென்றந்
  நான்மறை கண்டிலதே.

போந்த நிலைகள் பலவும் பராசக்தி
  பூணு நிலையாமே -- உப
சாந்த நிலையே வேதாந்த நிலையென்று
  சான்றவர் கண்டனரே.

கவலை துறந்திங்கு வாழ்வது வீடென்று
  காட்டும் மறைகளெலாம் -- நீவிர்
அவலை நினைந்துமி மெல்லுதல் போலிங்கு
  அவங்கள் புரிவீரோ?



உள்ள தனைத்திலு முள்ளொளி யாகி
  யொளிர்ந்திடு மான்மாவே -- இங்கு
கொள்ளற் கரிய பிரமமென் றேமறை
  கூவுதல் கேளீரோ?



மெள்ளப் பலதெய்வம் கூட்டி வளர்த்து
  வெறுங்க தைகள்சேர்த்துப் -- பல
கள்ள மதங்கள் பரப்புதற் கோர்முறை
  காட்டவும் வல்லீரோ?

ஒன்றுபிரம முளதுண்மை யஃதுன்
  உணர்வெனும் வேதமெலாம் -- என்றும்
ஒன்றுபிரம முளதுண்மை யஃது
  உணர்வெனக் கொள்வாயே.




# 14. செந்தமிழ் நாடு

செந்தமிழ் நாடெனும் போதினிலே -- இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே -- எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே -- ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே -- (செந்தமிழ்)

வேதம் நிறைந்த தமிழ்நாடு -- உயர்
வீரம் செறிந்த தமிழ்நாடு -- நல்ல
காதல் புரியும் அரம்பையர் போல்இளங்
கன்னியர் சூழ்ந்த தமிழ்நாடு (செந்தமிழ்)

காவிரி தென்பெண்ணை பாலாறு -- தமிழ்
கண்டதோர் வையை பொருநைநதி -- என
மேவிய யாறு பலவோடத் -- திரு
மேனி செழித்த தமிழ்நாடு. (செந்தமிழ்)

முத்தமிழ் மாமுனி நீள்வரையே -- நின்று
மொய்ம்புறக் காக்குந் தமிழ்நாடு -- செல்வம்
எத்தனை யுண்டு புவிமீதே -- அவை
யாவும் படைத்த தமிழ்நாடு (செந்தமிழ்)



நீலத் திரைக்கட லோரத்திலே -- நின்று
நித்தம் தவஞ்செய் குமரிஎல்லை -- வட
மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ்நாடு. (செந்தமிழ்)

கல்வி சிறந்த தமிழ்நாடு -- புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு -- நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு. (செந்தமிழ்)


வள்ளுவன் தன்னை உலகினுக்கே -- தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு -- நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்றோர் மணி
யாரம் படைத்த தமிழ்நாடு. (செந்தமிழ்)



சிங்களம் புட்பகம் சாவக -- மாகிய
தீவு பலவினுஞ் சென்றேறி -- அங்கு
தங்கள் புலிக்கொடி மீன்கொடியும் நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு. (செந்தமிழ்)

விண்ணை யிடிக்கும் தலையிமயம் -- எனும்
வெற்பை யடிக்கும் திறனுடையார் -- சமர்
பண்ணிக் கலிங்கத் திருள்கெடுத்தார் தமிழ்ப்
பார்த்திவர் நின்ற தமிழ்நாடு. (செந்தமிழ்)

சீன மிசிரம் யவனரகம் -- இன்னும்
தேசம் பலவும் புகழ்வீசிக் -- கலை
ஞானம் படைத்தொழில் வாணிபமும் மிக
நன்று வளர்த்த தமிழ்நாடு. (செந்தமிழ்)



# 15. நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே



நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே,
 நீங்களெல்லாம்
சொற்பனந்தானா? -- பல
 தோற்ற மயக்கங்களோ?
கற்பதுவே, கேட்பதுவே, கருதுவதே,
 நீங்களெல்லாம்
அற்ப மாயைகளோ? -- உம்முள்
 ஆழ்ந்த பொருளில்லையோ?


வானகமே, இளவெயிலே, மரச்செறிவே,
 நீங்களெல்லாம்
கானலின் நீரோ? -- வெறுங்
 காட்சிப் பிழைதானோ?
போனதெல்லாம் கனவினைப்போற்
 புதைந்தழிந்தே போனதனால்
நானுமோர் கனவோ? -- இந்த
 ஞாலமும் பொய்தானோ?



காலமென்றே ஒருநினைவும்
காட்சியென்றே பலநினைவும்
கோலமும் பொய்களோ? -- அங்குக்
குணங்களும் பொய்களோ?
சோலையிலே மரங்களெல்லாம்
தோன்றுவதோர் விதையிலென்றால்
சோலை பொய்யாமோ? -- இதைச்
சொல்லொடு சேர்ப்பாரோ?



காண்பவெல்லாம் மறையுமென்றால்
மறைந்த தெல்லாம் காண்பமன்றோ?
வீண்படு பொய்யிலே -- நித்தம்
விதிதொடர்ந் திடுமோ?
காண்பதுவே உறுதிகண்டோம்,
காண்பதல்லால் உறுதியில்லை
காண்பது சக்தியாம் -- இந்தக்
காட்சி நித்தியமாம்.





## மகாகவி
# சி. சுப்பிரமணிய பாரதியார்

- தமிழ் இலக்கிய உலகமே போற்றும் முண்டாசு கவிஞர் இவர்.
- கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம், புதிய ஆத்திச்சூடி போன்றன இவரது புகழ் பெற்ற படைப்புகள்.
- தேசியக்கவிஞர், எழுத்தாளர், பத்திரிக்கையாசிரியர், சமூக சீர்திருத்தவாதி, பாடகர் என பட்டம் பல பெற்றவர்.
- குழந்தைகளின் பிஞ்சு உள்ளங்களில் சாதிப்பிரிவு என்னும் நஞ்சு விதைக்கப்படுதல் கூடாது என்று கருதியவர் பாரதி.
- கேலிச்சித்திரங்கள் வரையும் முறையைத் தமிழுக்கு கொடுத்தவர் இவரே.
- தமிழ், ஆங்கிலம், கணிதம், வடமொழி, இந்தி, பிரெஞ்ச், வங்காளம், அரபு என பன்மொழி புலமை பெற்றவர்.

காணி நிலத்தில் சின்னஞ்சிறு கிளி வளர்த்தேன், ஆசைமுக மறந்தது வருவாய் கண்ணா கோடி இன்பம் தொழில் செய்கையில் கல்வியினால் பெண் விடுதலை பெற்று, ஆணை விற்கும் மாமாவிற்கு உழைத்த களைப்பு போக ஜலசா சொல்லிப்படி சிவசக்தியினை வேண்டி அறிவு தெய்வத்தைப் பெற்று மூச்சில் கலந்த தமிழை நாடெங்கும் போற்றிப்படி, நிற்பதில், நடப்பதில், பறப்பதில் கவி புனைந்த முண்டாசு கவியின் இந்த முத்துமாலை (புத்தகம்) பதினைந்து வைரங்களால் அலங்கரிக்கப்பட்டப் பெட்டகம்.

நன்றி !



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com